29th April 1959]

SRI C. MUTHIAH : தாமதத்திற்குக் காரணம் என்ன ? எப்பொழுது முடியும் ? ஜில்லா போர்டினுடைய காலம் இன்னும் நீடிக்கப்பட வேண்டுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : கழிந்த வருஷம் பஞ்சாயத்து மசோதா வந்தபோது, 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ந் தேதி முடிக்கவேண்டுமென்றுள்ள திட்டத்தை இந்தச் சபையில் அறிவித்திருந்தது. அதன்படி முடிப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கிறது.

SRI S. LAZAR : முதல் க்ரூப் ஆப் பஞ்சாயத்து யூனியன்கள் எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இந்த ஆண்டில் ஆரம்பிப்பதாக உத்தேசம் இருக்கிறது.

Bell Metal Co-operative Industry

* 255 *Q.*—SRI T. R. RAMAMIRTHA THONDAMAN (on behalf of Sri A. E. CHANDRASEKHARAN) : Will the Hon. the Minister for Home be pleased to state the present stage of the proposal to start a Bell Metal Co-operative Industry at the Arcot Development Block?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The proposal is under consideration.

Bee-keeping

* 256 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government offer any subsidy to encourage bee-keeping by private enthusiasts; and

(*b*) if so, the basis on which such subsidies are offered?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes, Sir. Bee hives are supplied to interested bee-keepers and subsidy of Rs. 10 is given for each hive, on the basis of the pattern of financial assistance given by the Khadi and Village Industries Commission, Bombay. In addition to this, Bee colonies and honey extractors are also being distributed to the villagers in the Block areas at 50 per cent cost.

SRI A. VEDARATHNAM : காதி அண்டு வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் கமிஷன் எத்தனை பேருக்கு எவ்வளவு தொகை மான்யம் கொடுத்திருக்கிறது? அதைப் பூர்ணமாகச் செலவு செய்தாய்விட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 90 ஆயிரம் ரூபாய் இதற்கு காதி அண்டு வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் கமிஷன் கொடுத்திருக்கிறது. அது இப்பொழுது பல இடங்களில் வினியோகிக்கப்பட்டு வருகிறது.

SRI M. S. SELVARAJAN : Has it been utilized in non-Block areas and if so, to what extent?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது இது வரையில் ப்ளாக் ஏரியாவுக்குத்தான் அமுல் நடத்தப்பட்டு வருகிறது. இன்னும் சிற்சில இடங்களில் ப்ளாக்குக்கு வெளியிலும் நடத்தப்பட்டு வருகிறது.

Police protection to railway goods

*257 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether policing responsibility of railway goods and properties is undertaken by the State Police ; and

(*b*) if so, the strength, i.e., deputed for this purpose?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI K. SATTANATHA KARAYALAR : ரெயில்வே சொத்துக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு நம்முடைய ராஜ்ய போலீசுக்குக் கிடையாதா? பாஸஞ்சர் டிராபிக்கைப் பொறுத்த வரையில் நமது போலீசுக்குப் பொறுப்பு இல்லையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரெயில்வே செக்யூரிடி போர்ஸ் இருக்கிறது. அவர்கள் பாதுகாத்துக்கொள்வார்கள். பொதுவாக பாதுகாப்பதற்காக இந்த ராஜ்யத்தைச் சேர்ந்த ரெயில்வே போலீஸ் கவனம் செலுத்தி வருகிறது.

Manimuthar Project

258 *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM) : Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal to include any ayacuts which will be immediately beneficial in the Manimuthar Project?

THE HON. SRI P. KAKKAN : An ayacut of 17,378 acres has been included already under the Manimuthar Project. The question of including 2,792 acres of water rate lands under several tanks and certain inam and private tanks lying in the midst of ayacut and in between the chain of tanks is under consideration by the Public Works Department and Revenue Officers. Beyond this, it may not be possible to include any more area under the Project.

SRI M. K. SOMASUNDARAM : அந்த நிலங்கள் எந்த எந்த தாலூகாவில் இருக்கின்றன என்று தெரிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : பொதுவாக, இந்த மணிமுத்தாறு பாசன உதவி அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, நான்குனேரி ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் தாலூக்காக்களுக்குத்தான் இருக்குமென்று நினைக்கிறேன். பொதுவாக, இந்த 2,792 ஏக்கராக்கள் இந்தத் தாலூக்காக்களில் இருக்கலாம். அல்லது ஒரே தாலூகாவிலும் இருக்கலாம். எந்த எந்த தாலூகாவில் எத்தனை ஏக்கர்கள் என்பதற்குத் தனிக் கேள்வி போடலாம்.